Please check the examination details below before entering your candidate information

| Candidate surname | Other names |
| --- | --- |
| | |

Centre Number | | | | | |

Candidate Number | | | | |

# Pearson Edexcel International GCSE (9–1)

**Time** 2 hours 30 minutes

**Paper reference** **4TA1/01**

# Tamil

## PAPER 1: Reading, Writing and Translation

**You do not need any other materials.**

Total Marks

## Instructions

- Use **black** ink or ball-point pen.
- **Fill in the boxes** at the top of this page with your name, centre number and candidate number.
- There are **three** sections you must answer:
  – Section A Questions 1–4
  – Section B Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c)
  – Section C Question 7.
- Answer the questions in the spaces provided
  – *there may be more space than you need*.
- You must **not** use a dictionary.

## Information

- The total mark for this paper is 100.
- The marks for **each** question are shown in brackets
  – *use this as a guide as to how much time to spend on each question*.

## Advice

- Read each question carefully before you start to answer it.
- Check your answers if you have time at the end.

*Turn over*


©2022 Pearson Education Ltd.

**SECTION A: READING**

**Answer ALL questions.**

**Write your answers in the spaces provided.**

**Multiple-choice questions must be answered with a cross in a box ☒. If you change your mind about an answer, put a line through the box ☒ and then mark your new answer with a cross ☒. Open-response questions do not have to be written in full sentences and you may respond using single words or phrases.**

1 கீழ்க்கண்ட பத்தியிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி தமிழில் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். சரியான எழுத்தைப் பெட்டியில் இடவும்.

**கல்வெட்டுகள்**

இந்நாட்களில் கல்வெட்டுகள் சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமாகி வருகிறது. தமிழ் கல்வெட்டுகளுடன் கூடிய கற்குகைகள் இன்றும் தமிழ்நாட்டில் உள்ள மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் உள்ளன. சுப்பிரமணியர் மலை மதுரையிலிருந்து சுமார் பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள வரிச்சியூர் என்ற இடத்தில் உள்ளது. இங்கே வடதிசை குகையில் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துக்களால் கற்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. பண்டைய நாளில் ஒரு பள்ளிக்கு நூறு கிலோ கிராம் அரிசி தானம் செய்த ஒரு மனிதனின் கதையை அது சொல்கிறது.

குகையின் உள்ளே விஜயநகர மன்னரின் கோயில் உள்ளது. அங்கே சிவன் கோயில்கள் லிங்க வடிவில் உள்ளன. இவை தவிரப் பல குடைவரைக் கோயில் சிலைகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை நமது கலாசாரம், கடந்த கால மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றித் தொடர்ந்து அறிய உதவுகின்றன. இவ்வாறானவற்றைப் பாதுகாத்துப் புதுப்பிக்கப்பட வேண்டிய தேவை மிகவும் உள்ளது.



P 7 1 0 7 8 A 0 2 2 0

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

| | | |
|---|---|---|
| **A** கல்படுகைகளில் | **B** பருத்தி | **C** முருகன் |
| **D** வடக்கு | **E** நகைகள் | **F** கட்டுமானம் |
| **G** உணவைக் | **H** புதுப்பித்தலால் | **I** பணம் |
| **J** பழமையானவை | **K** பாரம்பரியம் | **L** பண்பாட்டு |
| **M** லிங்க | | |

| **உதாரணமாக** | சில கோயில்கள் பாறைகளால் ஆனவை |
|---|---|
| **1** (a) | மதுரை அருகாமையிலுள்ள குகைக் கோயில்கள் மிகவும் .................................................. |
| **1** (b) | .................................................. பழமையான எழுத்துகள் காணப்படுகின்றன. |
| **1** (c) | கடந்த காலத்தில் மக்கள் .................................................. காணிக்கையாக வழங்கினார்கள். |
| **1** (d) | சிவன் கோயில்கள் .................................................. வடிவில் அமைந்துள்ளன. |
| **1** (e) | .................................................. மட்டுமே இக்கோயில்களைக் காப்பாற்றமுடியும். |
| **1** (f) | குகைக் கோயில்கள் பண்டைய வழக்கங்களையும் .................................................. மரபுகளையும் கொண்டுள்ளது. |

**(Total for Question 1 = 6 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**2** கீழே உரையாடலை வாசித்து 8 பொருத்தமான விடைகளுக்கு புள்ளடியிடுக. சில விடைகளுக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட புள்ளடிகளை இட அல்லது எதையுமே இடாதிருக்க வேண்டியிருக்கலாம்.

மொழி பற்றிய விவாதம்: முதல் மொழி - இரண்டாம் மொழி

**பவழம்:**



நாம் பேசும் மொழி நமது எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தவும் முக்கியமாக மற்றவர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளவும் உதவுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழியைக் கற்றுக்கொள்வது அறிவிற்கு நல்லது என்பதை அறிவியல் நிரூபித்துள்ளது. இருப்பினும் மற்ற மொழிகளில் பேசுவது என்பது சொந்த மொழியில் பேசக் கற்றுக் கொள்ள முடியாத நிலையில் நடக்கக் கூடாது. இது சமீப காலங்களில் இருமொழி குழந்தைகளுக்கு ஒரு கடுமையான பிரச்சினையாக உள்ளது.

**வைரம்:**



உங்கள் சொந்த மொழியையும் உள்ளூர் மொழியையும் கற்றுக்கொள்வது தனிமை உணர்வைத் தவிர்க்க மிகவும் முக்கியமாகும். உள்ளூர் மொழி இல்லாமல் நட்பைப் பேணுவதும் பாதுகாப்பை உணர்வதும் மிகவும் கடினமாகும். கலாச்சாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆர்வம் மிகவும் முக்கியமானது. எனவே தமிழ் போன்ற உங்கள் சொந்த மொழியில் பேசுவதற்கு சமூக அழுத்தம் முக்கிய பங்கு வகிக்கிறது.

**கோமதி:**



இருமொழி கொண்ட குழந்தைகளைக் கையாளப் பெற்றோர்களும் கல்வியாளர்களும் சமூகமும் நன்கு தயாராக இருக்க வேண்டும். குறிப்பாக உள்ளூர் மொழியில் பேச முடியாத பெற்றோர்களின் குழந்தைகளுக்கு இது மிகவும் சவாலானது.

இளம் குழந்தைகளுக்குத் தங்கள் கலாச்சாரம் மற்றும் சொந்த மொழியில் கதைகளை வாசித்து வைத்துக் கொள்வது, அவர்கள் இரு மொழிகளையும் நன்கு கற்றுக்கொள்வதற்கு உதவும். தங்கள் சொந்த மொழியில் கதைகளைப் படிப்பதின் மூலம், கலாச்சார மற்றும் பாரம்பரியத்தைப் பராமரிக்கவும், மொழிகளைக் கற்றுக்கொள்ளுதலையும் இது எளிதாக்கும்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

| | | பவழம் | வைரம் | கோமதி |
|---|---|---|---|---|
| **உதாரணமாக** | மொழி கற்றல் அனைவருக்கும் மிக முக்கியமாகும் | ☒ | ☐ | ☒ |
| **A** | உணர்வுகளை நன்கு வெளிப்படுத்த மொழிகள் உதவுகின்றன. | ☐ | ☐ | ☐ |
| **B** | இது தனிமை உணர்வைத் தவிர்க்க உதவுகிறது | ☐ | ☐ | ☐ |
| **C** | குழந்தைகளின் அறிவாற்றலை வளர்ப்பதற்கு இது மிகவும் முக்கியமாகும். | ☐ | ☐ | ☐ |
| **D** | பல மொழிகளைக் கற்றுக்கொள்வது எளிதல்ல | ☐ | ☐ | ☐ |
| **E** | உள்ளூர் மொழியில் நன்றாகப் பேசுபவர்கள் சமூகத்தில் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள் | ☐ | ☐ | ☐ |
| **F** | சொந்த மொழியை இழந்தால் பாரம்பரியத்தை இழக்க நேரிடும். | ☐ | ☐ | ☐ |
| **G** | அறிவியலும், சமூகமும், மொழிகள் கற்றவரை ஆதரிக்கின்றன. | ☐ | ☐ | ☐ |

**(Total for Question 2 = 8 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**3** ஸ்ரீலங்கா (இலங்கை) பற்றிய கட்டுரையைப் படியுங்கள். தமிழில் எண்கள் அல்லது சொற்களால் பதிலளிக்கவும்.

**ஸ்ரீலங்கா (இலங்கை)**

ஸ்ரீலங்காவின் புகழ் பெற்ற வரலாறும் அதன் கலாசாரமும் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. நீங்கள் ஸ்ரீலங்காவிற்கு விஜயம் செய்யும் போது, இரண்டு பிரதான பாரம்பரியக் கலாச்சாரங்களைச் சந்திக்க வாய்ப்புள்ளது: இலங்கை மக்கள் தொகையில் எழுபத்தைந்து சதவீதம் வரை உள்ள சிங்கள மொழி பேசும் சமூகம், பண்டைய நகரங்களான கண்டி மற்றும் அனுராதபுரத்தைத் தளமாகக் கொண்டுள்ளன. தமிழ் பேசும் சமூகங்கள் யாழ்ப்பாண நகரத்தை அடிப்படையாகக் கொண்டவை.

மட்டைப்பந்து (cricket) ஸ்ரீலங்காவின் புகழ்பெற்ற விளையாட்டுகளில் ஒன்றாகும். தேசிய மட்டைப்பந்து அணி விளையாடும் போது அது அனைத்து சமூகங்களையும் சிங்கக் கொடியின் கீழ் ஒன்றாகக் கொண்டு வருகிறது. கொடியில், சிங்கம் அதன் வலது கையில் ஒரு வாளை வைத்திருக்கிறது. இது வீரத்தைக் குறிக்கிறது.

சிங்களர்கள் தமது புதிய ஆண்டை, அலுத் அவுருது என்று அழைத்துக் கொண்டாடுகிறார்கள். அதே நாளில் தமிழர்கள் தங்கள் புத்தாண்டு விழாவைக் கொண்டாடுகிறார்கள். இது வருடப்பிறப்பு என்று அழைக்கப்படுகிறது. இது அறுவடைப் பருவத்தின் முடிவைக் குறிக்கிறது.

தேயிலை, இரப்பர், காபி, சர்க்கரை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாட்டின் வருமானத்திற்கு முக்கியமானதாக உள்ளது. இருப்பினும் நாட்டின் முக்கிய பொருளாதார வளர்ச்சி சுற்றுலா, தேயிலை ஏற்றுமதி, ஆடை, அரிசி உற்பத்தி ஆகிய துறைகளில் உள்ளது. சமீப காலங்களில் உணவு பதப்படுத்துதல் மற்றும் ஜவுளி போன்ற பல தொழில்களில் சமூக மாற்றங்கள் நடந்து வருகின்றன. ஸ்ரீலங்கா மக்களில் பலர் வெளிநாடுகளில் வேலை தேடிக் குடியேறியுள்ளனர்.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

(a) ஸ்ரீலங்காவின் கலாச்சாரம், அதன் .................................................................................... மிகவும் நன்கு அறியப்பட்டது.

**(1)**

(b) ...................................................................................., .................................................................................... ,

ஸ்ரீலங்காவில் உள்ள இரண்டு பிரதான குழுவினராவர்.

**(2)**

(c) ஸ்ரீலங்காவின் பெரும்பான்மையான மக்கள் .................................................................................... பேசுகின்றனர்.

**(1)**

(d) ஸ்ரீலங்காவின் .................................................................................... நகரம் தமிழர்களை மையமாகக் கொண்டுள்ளது.

**(1)**

(e) சிங்களவர் .................................................................................... என்ற ஊரில் குடிகொண்டுள்ளனர்.

**(1)**

(f) ஸ்ரீலங்காவின் சமூகங்களை .................................................................................... விளையாட்டு ஒன்றிணைக்கிறது.

**(1)**

(g) சிங்கத்தின் கையில் உள்ள வாள் .................................................................................... குறிக்கிறது.

**(1)**

(h) .................................................................................... ஏற்றுமதியில் எல்லாக் காலங்களிலும் உள்ள முக்கிய பொருள் ஆகும்.

**(1)**

(i) சிங்களப் புத்தாண்டு .................................................................................... கொண்டாட்டமாகும்.

**(1)**

(J) ..................................................................................... ....................................................................................

போன்றவை சமீபத்திய சமூக மாற்றங்களின் இரண்டு விளைவுகளாகும்.

**(2)**

**(Total for Question 3 = 12 marks)**

**4** (a) தையலின் முக்கியத்துவம் பற்றிப் பின்வரும் பத்திகளைப் படிக்கவும்.

**தையல்**

தையல் ஒரு காலத்தில் பெரிய பொழுதுபோக்காகக் கருதப்பட்டது. இது உங்களுக்குப் பயனுள்ள மற்றும் தனிப்பட்ட விஷயங்களைச் செய்து கொள்ள மிகவும் உதவியது. இது ஒரு பெரிய அகதிரன் உணர்வை வழங்கியது. இது வாழ்க்கைக்குத் தேவையான தன்னம்பிக்கையை வளர்க்கவும், நல்ல கவனம் செலுத்தவும், கவனத்தை மேம்படுத்தவும் மற்றும் சுய கட்டுப்பாடு போன்ற பிற முக்கிய திறன்களையும் கற்பிக்கிறது.

கடந்த காலத்தில் இது பழைய பள்ளிப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்து பின்னர் ஒரு விருப்பப் பாடமாக மாறியது. காலப்போக்கில், அந்நிலை முன்னேறி இந்நாட்களில் அலங்காரம்(ஃபேஷன்-fashion) வடிவமைத்தல் படிப்புகள் வாயிலாகப் பயனுள்ள அங்கீகாரம் பெற்ற திறம்மிக்க இடங்களில் இத்திறன் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஃபேஷன் என்பது இந்த நாட்களில் வெறும் ஆடைகள் தைப்பது அல்லது கிழிந்த ஆடைகளை மாற்றுதல் மட்டுமே அல்ல. அது அனைவரின் வாழ்க்கையிலும் இன்றியமையாத ஒரு தேவையாகவும் மாறி வருகிறது.

பழைய ஆடைகளைப் பயன்படுத்துவதில் சுற்றுச்சூழலுக்கு உகந்த திறன் என்றும் இப்போது கருதப்படுகிறது, ஆகையால் உபயோகமற்ற ஆடைகள், பயனுள்ள கைவினை அலங்காரப் பொருட்களாக புதியனவாக்குதல் என இன்று வீடுகளில் மாறி வருகிறது. புதிய கணினி வடிவமைப்பு மற்றும் கட்டுப்பாடுகள் மூலம் விரைவில் சிக்கலான வடிவங்களைக் கூட உருவாக்க முடியும். சமூக ஊடகங்கள் குறைந்த செலவில் சொந்தமான வணிகம் உருவாக்கவும் அதே நேரத்தில் ஓர் எளிதான வாடிக்கையாளர் தளம் அமைக்கவும் உதவுகிறது. சமூக ஊடகங்கள் இந்தப் பொழுதுபோக்கைக் குறைந்த செலவுடன் கூடிய ஒரு சொந்தமான வணிகமாக மாற்ற உதவுகிறது. இதை ஒரு பொழுதுபோக்காக எடுத்துக்கொள்ள உங்களை ஊக்குவிக்கிறது, இல்லையா?

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA



P71078A0820

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**4** (a) கேள்விகளுக்கான விடையை **தமிழ்** மொழியில் தரப்பட்ட தகவல்களிலிருந்து எழுதுக. முழு வசனத்தில் விடை எழுத வேண்டும்மென்பது கிடையாது.

(i) தையல் உங்களை எப்படி ஓய்வெடுக்கச் செய்கிறது? இரண்டு விவரங்கள் தரவும்.

**(2)**

....................................................................................................................................................................................................

....................................................................................................................................................................................................

(ii) நீங்கள் அதிக நம்பிக்கையுடன் இருக்கத் தையல் எவ்வாறு உதவுகிறது?

**(1)**

....................................................................................................................................................................................................

(iii) கல்வியில் தயைல் கலயையின் மாற்றத்ததைத் தருக.

**(2)**

....................................................................................................................................................................................................

....................................................................................................................................................................................................

(iv) ஃபேஷன் உலகின் மாறிவரும் இயல்பு பற்றிய இரண்டு விளைவுகளைத் தரவும்.

**(2)**

....................................................................................................................................................................................................

....................................................................................................................................................................................................

(v) மேலே உள்ள உரையின்படி இந்தப் பொழுதுபோக்கு சுற்றுச்சூழலுக்கு எந்த வழியில் உதவுகிறது.

**(1)**

....................................................................................................................................................................................................

(vi) இந்தப் பொழுதுபோக்கைத் தொழில்நுட்பம் எவ்வாறு ஆதரிக்கிறது.

**(1)**

....................................................................................................................................................................................................

(vii) சமூக ஊடகங்கள் இந்தப் பொழுதுபோக்கை ஒரு வணிகமாக எவ்வாறு ஆதரிக்கிறது.

**(1)**

....................................................................................................................................................................................................

**4** (b) கலந்துரையாடல் பொழுதுபோக்கு மற்றும் மனநலனுக்கான முக்கியத்துவத்தைப் படியுங்கள். தமிழில் பதிலளிக்கவும்.

**பொழுதுபோக்கு மற்றும் மனநலன்**

சாரதா:

பொழுதுபோக்கானது மகிழ்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயல்பாடு அல்லது ஆர்வமாகும். இது ஒருவர், அவரின் நேரத்தைத் தனக்குப் பிடித்த விதத்தில் செலவிடவோ அல்லது தங்களின் மன அழுத்தத்தைக் குறைத்துக்கொள்ளவோ மேற்கொள்ளப்படுவதாகும். பொறுமை, முடிவெடுக்கும் திறன்களை வளர்க்கவும் இது உங்களுக்கு உதவுகிறது. பொழுதுபோக்குகளில் பல விளையாட்டுகள் விளையாடுவது, இசை கற்றல், முத்திரைகள் சேகரித்தல் மற்றும் காமிக் புத்தகங்கள் போன்ற பல வகைகள் உண்டு. இளம் குழந்தைகளிடையே மிகவும் பிரபலமானது அவர்களுக்குப் பிடித்த விளையாட்டு ஆளுமை அல்லது கதாபாத்திரங்களின் வர்த்தக அட்டைகள். வளர்ந்த சிறார்கள் நடைப்பயணம், பாறை ஏறுதல், மீன்பிடித்தல், வில்வித்தை மற்றும் வானியல் போன்ற வெளிப்புறப் பொழுதுபோக்குகளைச் செய்ய விரும்புகிறார்கள். இந்நாளில் எங்கள் நேரத்தைக் கழிக்க இலவச இணைய வலைத்தளங்களில் நாங்கள் நிறைய விளையாட்டுக்களைத் தேர்வு செய்கிறோம். இணைய இணைப்புடன் ஒரு சாதனத்தை வைத்திருக்க முடியுமானால் உங்கள் பொழுதுபோக்கை எங்கு வேண்டுமானாலும் தொடர அது மேலும் உதவுகிறது.

சந்தானம்:

ஒரு பொழுதுபோக்கு இருப்பது நிச்சயமாக மன அழுத்தத்தைக் குறைத்து, மன நலனை ஆதரிக்கிறது. இருப்பினும் சில நேரங்களில் விலை உயர்ந்ததாக இருப்பின் மேலும் அதனைத் தொடர்வது கடினமாகிறது. அதிக படைப்பாற்றல் மற்றும் சுய ஒழுக்கத்துடன் பொழுதுபோக்கைச் சாதிக்கப்படுவதை உணர நிறைய நேரம் தேவைப்படுகிறது. புத்தகங்களைப் படிப்பது போன்ற பயனுள்ள பொழுதுபோக்கைத் தேர்ந்தெடுப்பது முக்கியம். நான் குறிப்பாகக் கற்பனை புத்தகங்களைப் படிக்க விரும்புகிறேன். ஏனெனில் இது எனது கற்பனைக்கு உதவுகிறது மற்றும் வெவ்வேறு கதாபாத்திரங்களை, அவற்றின் நிலைமையை இரசிக்க அனுமதிக்கிறது. இது எனது கல்வியை ஆதரிக்கும் நல்ல அறிவையும் வழங்குகிறது. நான் நூலகத்திலிருந்து இலவசமாகப் புத்தகத்தைக் கடன் வாங்க முடியும் என்பதனால் எனக்குப் பணச் செலவு கிடையாது. ஒரு புத்தகத்தைச் சொந்தமாக வைத்திருப்பது எந்தத் தொழில்நுட்பத்தையும் சார்ந்து இல்லாமல் எப்போது வேண்டுமானாலும் படிக்க ஏதுவாகிறது. மேலும், நான் படித்த புத்தகங்களை அடிப்படையாகக் கொண்ட படங்களைப் பார்க்க உற்சாகமாக இருக்கிறேன்.



P 7 1 0 7 8 A 0 1 0 2 0

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**4** (b) (i) சாரதாவின் கூற்றுப் படி ஒரு பொழுதுபோக்கைக் கொண்டிருப்பதன் இரண்டு நன்மைகளைக் கூறுங்கள்

**(2)**

........................................................................................................................................................................................................

........................................................................................................................................................................................................

(ii) சந்தானத்தின் கூற்றுப் படி ஒரு பொழுதுபோக்கைக் கொண்டிருப்பதில் இரண்டு குறைபாடுகளைக் கூறுங்கள்

**(2)**

........................................................................................................................................................................................................

........................................................................................................................................................................................................

**(Total for Question 4 = 14 marks)**

**TOTAL FOR SECTION A = 40 MARKS**

## SECTION B: WRITING

Answer Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c).

**Write your answers in the spaces provided.**

**5** உங்களுக்குப் பிடித்த இசையைப் பற்றித் தமிழில் 60 முதல் 75 வார்த்தைகளுக்குள் எழுதுங்கள். கீழேக் குறிப்பிட்ட அனைத்து வார்த்தைகளையும் நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

**எனது கலாசாரத்தில் இசை**

| | |
|---|---|
| நான் விரும்பிய இசை வகை | இசைக்கருவி |
| விருப்பமான கலாச்சார இசை | இசையின் எதிர்காலம் |

**(14)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 5 = 14 marks)**

**6** பின்வரும் மூன்று விருப்பத் தெரிவில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, தமிழில் சுமார் 75 வார்த்தைகளில் எழுதவேண்டும்.

**விருப்பத்தேர்வு 1**

(a) உங்களை மிகவும் கவர்ந்த ஒரு புத்தகத்தைப் பற்றி எழுதுங்கள்::

- அதன் வகை மற்றும் கதை
- உங்களுக்குப் பிடித்தக் கதாபாத்திரம் அல்லது பகுதி
- நீங்கள் அதை ஏன் பரிந்துரைக்கிறீர்கள்

**(26)**

**விருப்பத்தேர்வு 2**

(b) உங்கள் தலைமை ஆசிரியருக்கு மாணவர் சபையின் பதவிக்கு விண்ணப்பிப்பதைப் பற்றிய ஒரு கடிதம் எழுதவும்

- எது உங்களைப் பொருத்தமான வேட்பாளராக ஆக்குகிறது
- பள்ளிச் சமூகத்தை நீங்கள் எவ்வாறு ஆதரிப்பீர்கள்
- உங்களின் பார்வை

**(26)**

**விருப்பத்தேர்வு 3**

இணையதளக் கல்விகற்றல் பற்றிய உங்கள் அனுபவம் குறித்து உங்கள் நண்பருக்கு ஒரு மின்னஞ்சல் எழுதவும்.

- இணையதளக் கல்வி கற்றலின் நன்மைகள்
- அது முன்வைக்கும் சவால்கள்
- மற்றவர்களுக்கு உங்களுடைய ஆலோசனை

**(26)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA



P71078A01420

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

**Indicate which question you are answering by marking a cross ☒. If you change your mind, put a line through the box ☒ and then indicate your new question with a cross ☒.**

**Question 6(a)** ☒ **Question 6(b)** ☒ **Question 6(c)** ☒

**(Total for Question 6 = 26 marks)**

**TOTAL FOR SECTION B = 40 MARKS**



P 7 1 0 7 8 A 0 1 6 2 0

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**SECTION C: TRANSLATION INTO TAMIL**

**Write your answer in the space provided.**

7 பின்வரும் கட்டுரையைத் **தமிழில்** மொழிபெயர்க்கவும்

Agriculture is growing crops and raising animals. This provides us with food and many other raw materials. Food like fruits, vegetables and grains are some of the most farmed produces. Farmers choose a suitable crop to grow based on the climate. Organic farmers use natural methods to grow crops and protect the soil. Big companies taking control over much of the world's farmland forces farmers to move out to cities in search of modern jobs. This has led to the loss of knowledge and skills about native crops.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 7 = 20 marks)**

**TOTAL FOR SECTION C = 20 MARKS**

**TOTAL FOR PAPER = 100 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**



P 7 1 0 7 8 A 0 1 9 2 0

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**

**Source Information**

**Question 2**

© hadynyah/Getty Images